# பசுமைக்கதிர்

(ஜனவரி - ஜூன் 2024)

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம், புது தில்லி

## வேளாண்மை அறிவியல் மையம்

திருவண்ணாமலை மாவட்டம்



கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல்,
வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம் - 604 410.
தொலைபேசி : 04182-290551, 6384093303,
kvktvmalai91@gmail.com
www.kvkthiruvannamalai.com


சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. - குறள்

भारत 2023 INDIA

INTERNATIONAL YEAR OF MILLETS 2023

### ஆசிரியர் குரல்

விவசாயச் சொந்தங்களுக்கு,

மீண்டும் பசுமைக்கதிர் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பருவநிலை மாற்றத்தின் காரணமாக அதிகளவு வெப்பம் மற்றும் பருவம் தவறிய மழை பதிவாகிறது. குறைந்த மழை மற்றும் அதிக வறட்சியிலும் தாங்கி வளரும் திறன் கொண்ட இரகங்களையும் மற்றும் குறைந்த நாளில் அதிக லாபம்தரும் சிறுதானியங்களையும் சாகுபடி செய்வது முக்கியத்துவம் பெறுகிறது. பட்டத்திற்கு தகுந்தவாறு பயிர் தேர்வு, நல்ல ரகங்களை தேர்ந்தெடுத்தல் தரமான விதைகள், ரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகளுக்கான செலவுகளை குறைப்பது ஆகியவற்றின் மூலம் செலவை குறைக்க முடியும்.

மேலும் விவசாயிகள் கூட்டாக செயல் படும்போது விவசாய இடுபொருட்களுக் கான செலவு குறைக்கப்படுவதுடன், விற் பனைத் திறனையும் அதிகப்படுத்தி ஓரளவு லாபம் பார்க்க இயலும். மத்திய, மாநில அரசுகளும் உழவர் உற்பத்தியாளர் குழு, உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஆகியவற்றிற்கு தற்போது முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இக்குழுக்களுக்கு மானிய திட்டங்கள், விற்பனை செய்வதற்கான ஏற்பாடு மற்றும் பல சலுகைகளை வழங்கி வருகின்றன. குழு முறையில் விவசாயிகள் விவசாய பொருட்களை உற்பத்தி செய்து விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ச.ரமேஷ், B.A.,LLB.**
சிறப்பு ஆசிரியர்

## வயல் வெளி ஆய்வுத்திட்டம்

### பீர்க்கனில்உயர் விளைச்சல் தரும் இரகங்களைமதிப்பீடுசெய்தல்

வந்தவாசி வட்டம் கீழ்செம்பேடு கிராமத்தில் புதிய உயர் விளைச்சல் தரும் இரகங்களான அர்க்காபிரசன் மற்றும் மதுரை-1 ஆகிய இரண்டு இரகங்கள் ஐந்து விவசாயிகளின் நிலங்களில் மதிப்பீடு செய்யப்பட்டன. இவற்றில், தமிழ்நாடு வேளாண்மைபல் கலைக் கழகத்தால் வெளியிடப்பட்ட மதுரை-1 இரகம் அதிக விளைச்சளையும் எக்டருக்கு 203.6 குவிண்டால் மகசூலையும், நிகரவருமானமாக எக்டருக்கு ரூபாய் 181236 கொடுத்ததாக கண் டறியப்பட்டது. மேற்குறிப்பிட்ட விளைச்சல் சராசரி விளைச் சலைவிட 17.9 சதவீதம் கூடுதல் ஆகும்.

### துவரையில் உயர் விளைச்சல் தரும் ரகங்களை மதிப்பீடு செய்தல்

போளூர் வட்டம் கேளூர் கிராமத்தில் 5 விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் தரும் ரகங்களான எல்.ஆர்.ஜி 105 மற்றும் கோ 8 துவரையில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது ஆய்வில் தமிழ்நாடு வேளான் பல்கலைகழகத்தால் வெளியிடப்பட்ட ராகமான கோ 8 ஒரு எக்டருக்கு 14.78 குவிண்டால் கிடைப்பது உறுதி செய்யபட்டது நிகர வருமானம் ஹெக்டருக்கு ருபாய் 77640/- வரை கிடைப்பதாக விவசாயிகள் கூறினார்

### வேர்க்கடலையில் உயர் விளைச்சல் தரும் ரகங்களை மதிப்பீடு

மேற்கு ஆரணி வட்டம் மட்டதாரி கிராமத்தில் 5 பட்டியலின முன் னோடி விவசாயிகளுக்கு உயர் விளைச்சல் தரும் ரகங்களான டீ. சி.ஜி.எஸ் 1694 மற்றும் வி.ஆர் .ஐ 9 வேர்க்கடலையில் கள ஆய் வு மேற்கொள்ளப்பட்டது ஆய்வின் முடிவில் டீ.சி.ஜி.எஸ் 1694 என் கிற ராகம் ஒரு ஹெக்டருக்கு 22.56 குவிண்டால் கிடைப்பது உறுதி செய்யபட்டது நிகர வருமானம் ஹெக்டருக்கு ருபாய் 95308 வரை கிடைப்பதாக விவசாயிகள் கூறினார்





## முதல்நிலை செயல்விளக்கங்கள்

### நிலக்கடலையில் தொகுப்பு முதல்நிலை செயல்விளக்கம்



தொகுப்பு முதல்நிலை செயல் விளக்கத்திட்டத்தின் கீழ் 2023-24 ஆம் ஆண்டு ரபி பருவத்தில் ஆரணி வட்டம் முள்ளண்ந்திரம் கிராமத்தில் 50 விவசாயிகளுக்கு புதிய நிலக்கடலை இரகமான ஏசுஜ-8 செயல்விளக்கம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 20 எக்டர் நிலப்பரப்பில் விவசாயிகள் புதிய நிலக்கடலை இரகங்களை சாகுபடி செய்தனர். இத்திட்டத்தின் பயனாக ஒரு எக்டருக்கு ஏசுஜ-8 இரகத்தில் 22.47 குவிண்டால் மகசூல் பெற்றனர். மேலும் சராசரி நிகர வருமானமாக ஒரு எக்டருக்கு 95610 ரூபாய் மற்றும் வரவு செலவு விகிதம் 2.55 பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.

### உளுந்தில் தொகுப்பு முதல்நிலை செயல்விளக்கம





2023-24 ஆம் ஆண்டு ரபி பருவத்தில் வெம்பாக்கம் வட்டம் கரந்தை மற்றும் திருப்பனமூர் கிராமத்தில் 100 விவசாயிகளுக்கு புதிய உளுந்து இரகமான VBN-8 மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டு செயல்விளக்கம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 40 எக்டர் நிலப்பரப்பில் விவசாயிகள் புதிய உளுந்து இரகங்களை சாகுபடி செய்தனர். இத்திட்டத்தின் பயனாக ஒரு எக்டருக்கு VBN-8 இரகத்தில் 7.99 குவிண்டால் மகசூல் பெற்றனர். மேலும் சராசரி நிகர வருமானமாக ஒரு எக்டருக்கு 50172/- ரூபாய் மற்றும் வரவு செலவு விகிதம் 2.9 பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.

### மஞ்சளில் TNAU நுண்ணூட்டக்கலவை செயல்விளக்கம



2023-24 ஆம் ஆண்டில் மேற்கு ஆரணி வட்டாரம் அம்மாபாளையம் கிராமத்தில் 10 விவசாயிகளுக்கு மஞ்சளில் அதிக விளைச்சல் பெற TNAU நுண்ணூட்டக்கலவை பற்றிய செயல்விளக்கம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் பயனாக ஒரு எக்டருக்கு 236.07 குவிண்டால் மகசூல் பெற்றனர். இது சராசரி நிகர வருமானமாக ஒரு எக்டருக்கு 203811/- ரூபாய் பெற்று விவசாயிகள் பயன் பெற்றனர். மேற்குறிப்பிட்ட மகசூல் சராசரி விளைச்சலை விட 20.49 சதவிகிதம் கூடுதலாக விவசாயிகள் பெற்றனர்.

### தர்பூசணியில் Arka shyama புதிய இரகம் பற்றிய செயல்விளக்கம்



வேளாண்மை அறிவியல் மையம் 2023-24 ஆம் ஆண்டில் வந்தவாசி வட்டாரம் மருதாடு கிராமத்தில் முதல்நிலை செயல்விளக்க திட்டத்தின் கீழ் 10 விவசாயிகளுக்கு தர்பூசணியில் Arka shyama புதிய இரகம் விதை செயல்விளக்கத்திற்காக வழங்கப்பட்டது. இச்செயல்விளக்கத்தின் முடிவில் ஒரு எக்டருக்கு 238.05 குவிண்டால் மகசூல் விவசாயிகள் பெற்றனர். மேலும் சராசரி நிகர வருமானமாக ஒரு எக்டருக்கு 173959/- ரூபாய் மற்றும் வரவு செலவு விகிதம் 2.3 பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.

## விரிவாக்க செயல்பாடுகள்

### மண்வள முகாம்



வேளாண் அறிவியல் மையத்தின் சார்பாக வந்தவாசி வட்டம் தென்சேந்தமங்கலம் கிராமத்தில் 05.01.24 அன்று மண் வள முகாம் நடைபெற்றது. இம்முகாம்களில் 31 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். இம்முகாமில் மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண்வள அட்டைகளும் வழங்கப்பட்டன. முகாம்களில் மண் ஆய்வின் முக்கியத்தும் மற்றும் மண் மாதிரி எடுத்தல் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது.

### பாரதப்பிரதமரின் உழவர்கள் கௌரவ நிதி வழங்குதல

விழாவிற்கு நாடாளுமன்ற விவகாரங்கள், தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை மத்திய இணை அமைச்சர் எல். முருகன் கலந்து கொண்டு மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு.தெ.பாஸ்கரப்பாண்டியன், செய்யாறு உதவி மாவட்ட ஆட்சியர் பல்லவி வர்மா, கலந்து கொண்டு சிறுதானிய உணவு திருவிழாவினை பார்வையிட்டு கௌரவ நிதி வழங்கும் விழாவிலும் கலந்து கொண்டனர். இதில் 820 விவசாயிகள் மற்றும் அங்கன்வாடி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விழாவிற்கு நாடாளுமன்ற விவகாரங்கள், தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் கலந்து கொண்டு மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு.தெ.பாஸ்கரப்பாண்டியன், செய்யாறு உதவி மாவட்ட ஆட்சியர் பல்லவி வர்மா, கலந்து கொண்டு சிறுதானிய உணவு திருவிழாவினை பார்வையிட்டு கௌரவ நிதி வழங்கும் விழாவிலும் கலந்து கொண்டனர். இதில் 820 விவசாயிகள் மற்றும் அங்கன்வாடி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



## ஊரக இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி

திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையுடன் இணைந்து ஊரக இளைஞர்களுக்கான 6 நாள் பயிற்சியாக "இரண்டாம் நிலை விவசாயம், அறுவடைபின் சார் தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதல் குறித்து 19.02.24 முதல் 24.02.24 வரை நடைபெற்றது.



இதில் திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு.சி. ஹரகுமார், உழவர் பயிற்சி மையத்தின் முனைவர் எம்.இராமநாதன் அவர்கள் கலந்துகொண்டு அறுவடை பின் கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள் மற்றும் மதிப்பு கூட்டுதலின் முக்கியத்தும் குறித்தும் பேசினார். இதில் 5 கிராமங்களிலிருந்து 15 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



## சர்வதேச மகளிர் தின விழா

வேளாண்மை அறிவியல் மையத்தில் 07.03.2024 அன்று நபார்டு வங்கியுடன் இணைந்து உலக மகளீர் தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. திரு.வே. சுரேஷ் அவர்கள் தலைமையேற்று தொடங்கிய இதில் நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் திரு. விஜய் நீகர் அவர்கள் கலந்து கொண்டார்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் அங்கன்வாடி அலுவலர்கள் சிறுதானிய உணவு போட்டியில் கலந்து கொண்டனர். வெம்பாக்கம் வட்டாரத்தை சார்ந்த 102 அங்கன்வாடி அலுவலர்கள் மற்றும் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.



## சிறுதானிய உணவுத் திருவிழா

வேளாண்மை அறிவியல் மையத்தில் 22.03.2024 அன்று சிறுதானியங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர்களின் பங்கேற்புடன் சிறுதானிய உணவு திருவிழா சிறப் பாக நடைபெற்றது. புதுதில்லி, இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக்கழகத்தின் துணை தலைமை இயக்குநர் முனைவர். உத்தம்சிங் கௌதம் அவர்கள் உணவு திருவிழாவில் கண்காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள சிறுதானிய உணவுகளை பார்வையிட்டார். வேளாண்மை அறிவியல் மையத்தில் புதியதாக அமைக்கப்பட் டுள்ள அங்கக இடுபொருட்கள் உற்பத்தி கூடத்தை திறந்து வைத்தார்.



இதில் ஹைதராபாத்திலுள்ள வேளாண்மை தொழில்நுட்ப பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் முதன்மை விஞ்ஞானி முனைவர். ஜே.வி.பிரசாத் அவர் கள் மற்றும் TNAU விரிவாக்க கல்வி இயக்குநர் முனைவர் பெ.பொ.முருகன் அவர்கள் கலந்துகொண்டனர்.

## வி.ஆர்.எம்-2 கத்திரியில் வயல்விழா

வந்தவாசி வட்டம் அமுதூர் கிராமத்தில் பட்டியல மக்களின் மேம்பாட்டிற்காக முதல்நிலை செயல்விளக்கத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்ட வி.ஆர்.எம்-2 கத்திரியில் செயல்விளக்கம் 10 விவசாயிகள் வயலில் செயல் படுத்தப்பட்டன. இந்த திட்டத்தின் கீழ் 28.03.2024 அன்று வயல்விழா நடத்தப்பட்டது.



இந்நிகழ்வில் திட்ட பயனாளி விவசாயிகள் தாங்கள் செயல்படுத்திய புதிய திட்டங்கள் குறித்து தங்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். வேளாண்மை அறிவியல் மையத்தின் விஞ்ஞானி இந்த செயல்விளக்கங் கள் சம்பந்தமான தொழில்நுட்ப விளக்கங்களை விவசாயிகளுடன் பகிர்ந்து கொண்டனர். இதில்18 முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## காய்கறி சிறப்பு நுண்ணூட்டக்கலவை




காய்கறிப் பயிர் சாகுபடியில் நுண்ணூட்டச்சத்துக்களின் பற்றாக்குறையை போக்கி, விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பெங்களூரு பல்வேறு ஆராய்ச்சிகளின் முடிவில் "காய்கறி சிறப்பு நுண்ணூட்டக் கலவையை" தயாரித்து வெளியிட்டுள்ளது. இந்த நுண்ணூட்டக்கலவை இலைவழித் தெளிப்பு (இலைவழி நுண்ணூட்டம்) செய்ய உகந்தது.

### இலைவழி நுண்ணூட்டம் செய்வதின் பயன்களை

- மண்ணில் சத்துக்கள் தங்கி வீணாவது தவிர்க்கப் படுகிறது.
- மண்ணில் உரங்களை இடும்போது மண் அரிமானம் காரணமாக உரம் வீணாவது இலைவழித்தெளிப்பில் தவிர்க்கப்படுகிறது.
- உடனடியாக பயிர்களுக்கு ஊட்டச்சத்து கிடைக் கிறது.
- பயிர்கள் நுண்ணூட்டச்சத்துக்களின் பற்றாக் குறையினால் பாதிக்கப்பட்டிருப்பின் உடனடியாக தெளிந்து விடும்.
- குறைந்த அளவு உரத்தேவை மற்றும் செலவு குறைவு.
- 20 முதல் 30 சதவீதம் கூடுதல் மகசூல்.
- தரமான விளைபொருட்ள் மற்றும் அதிக விற்பனை விலை கிடைக்கிறது.

### பயன்படுத்தும் முறை

- சிபாரிசு செய்யப்பட்ட அளவு நுண்ணூட்டக் கலவையை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து கொள் ளவும் (ஒரு டேங்க்). இக்கரைசலுடன் ஒரு எலுமிச்சம் பழத்தினை பிழிந்து விடவும். பின்பு இதனுடன் ஒரு பாக்கெட் ஷாம்புவை ஊற்றி நன்றாக கலந்து தெளிக்கவும்.
- பொதுவாக பயிர் நடவு செய்து 30 வது நாளில் அல்லது விதைத்த 45வது நாளில் முதல் தெளிப் பும், பிறகு மாதம் ஒரு முறையும் தொடர்ந்து தெளிக்க வேண்டும்.
- நுண்ணூட்டக்கலவையை காலை அல்லது மாலையில் பயிர் இலைகளின் அடிப்பாகம் நனையுமாறு தெளிப்பது சிறந்தது.

இந்த காய்கறிப் பயிர்களுக்கான சிறப்பு நுண்ணூட்டக் கலவையில் துத்தநாகம், மாங்கனீசு, இரும்பு, தாமிரம், மக்னீசியம், போரான் உள்ளிட்ட ஆறுவகையான முக்கிய நுண்ணூட்டச்சத்துக்கள் உள்ளன. எனவே விவசாயிகள் மேறகூறியவாறு இலைவழி நுண்ணூட்டம் செய்து காய்கறிப் பயிர்களில் உயர்விளைச்சலை குவித்து அதிக லாபம் பெறவேண்டுமாய் எங்களுடைய வேளாண் அறிவியல் மையத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் தொழில் நுட்ப உதவிகளுக்கு எங்களுடைய அறிவியல் மையத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

*******

**சிறப்பு ஆசிரியர்**

திரு.ச.இரமேஷ், தலைவர், தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனம்.

**ஆசிரியர்**

திரு.வே.சுரேஷ், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்

**ஆசிரியர் குழு**

திருமதி.த.மார்க்ரெட், தொழில் நுட்ப வல்லுநர் (மனையியல்)
திரு.ப.நாராயணன், தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு)
மரு.கா.மாயகிருஷ்ணன், தொழில் நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்)
செல்வி.மா.ஐஸ்வர்யா, தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்)
திரு.ர.விஜயகுமார், தொழில் நுட்ப வல்லுநர் (தோட்டக்கலை)
திருமதி.ம.சாந்தி, பண்ணை மேலாளர்
திரு.ப.சௌத்திரி, திட்ட உதவியாளர் (ஆய்வகம்)

**நிர்வாகக் குழு**

திருமதி.ம.விஜி அலுவலக உதவியாளர்
திரு.ஒ.சேகர், திட்ட உதவியாளர் (கணிப்பொறி)
திரு.கா.வாசிமலை, சுருக்கெழுத்தாளர்

### விற்பனைக்கு

| வ. எண் | பெயர் | விலை (ரூ) |
|---|---|---|
| 1 | காய்கறி நுண்ணூட்டக் கலவை (கிலோ) | 200.00 |
| 2 | டிரைக்கோடெர்மா (கிலோ) | 175.00 |
| 3 | பேசில்லஸ் சப்டிலிஸ் (கிலோ) | 175.00 |
| 4 | பிரண்டைபொடி (100 கிராம்) | 50.00 |
| 5 | கொள்ளுரசப் பொடி (100 கிராம்) | 40.00 |
| 6 | கடலை எண்ணெய் (1 லிட்டர்) | 230.00 |
| 7 | நல்லெண்ணெய் (1 லிட்டர்) | 380.00 |
| 8 | தேங்காய் எண்ணெய்(1 லிட்டர்) | 300.00 |
| 9 | நாட்டுக்காய்கறி விதைகள் (பாக்கெட்) | 20.00 |
| 10 | வேலிமசால் விதை (கிலோ) | 600.00 |
| 11 | தீவண மக்காச்சோள விதை (COFS31) (கிலோ) | 400.00 |
| 12 | மண்புழு உரம் (கிலோ) | 10.00 |
| 13 | மண்புழு (கிலோ) | 500.00 |
| 14 | அசோலா (கிலோ) | 50.00 |
| 15 | நேரடி நெல்விதைப்பு கருவி | 4950.00 |
| 16 | களையெடுக்கும் கருவி | 1950.00 |
| 17 | காளான் (கிலோ) | 200.00 |
| 18 | காளான் வித்து (கிலோ) | 150.00 |
| 19 | எலுமிச்சை | 60.00 |
| 20 | மா, சப்போட்டா, சாத்துக்குடி, நாவல், சீதா | 150.00 |
| 21 | கொய்யா | 80.00 |
| 22 | முள் சீதா | 225.00 |
| 23 | அத்தி | 100.00 |
| 24 | பலா | 130.00 |
| 25 | அழகுச் செடிகள் | 15.00 |
| 26 | மரக்கன்றுகள் | 15.00 |